**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 70/2020 |
| Name | : Dr.Ganapathy |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**சாட்சி Micro soft teams செயலி வாயிலாக ஆஜரான பின்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் மூத்த பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2019 அன்று கோவை அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக பணியில் இருந்த போது மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 23/2019 வழக்கில் மடத்துக்குளம் காவல் ஆய்வாளரின் வேண்டுகோளின் படி இறந்து போன சுமார் 40 வயது மதிக்கத்தக்க சத்தியவாணி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். பிரேதத்தை பெண் முதல்நிலை காவலர் 1098 திருமதி.கோகிலா என்பவரால் அடையாளம் காண்பிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையானது பிற்பகல் 12.10 மணி அளவில் ஆரம்பிக்கப்பட்டது. பிரேதத்தின் மரண விரைப்புத் தன்மை உடலில் மேல் பகுதியில் காணப்பட்டது. உடலானது மிதமான போஷாக்குடன் காணப்பட்டது. கை மற்றும் கால் விரல் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. இடது காலில் ரத்தம் கசிந்து காணப்பட்டது. உடலின் இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின் வருமாறு

1. நெற்றி 4*2 செ.மீ அளவிலும், வலது கன்னத்தில் 3*3 செ.மீ அளவிலான் சிராய்ப்பு காயம்

காணப்பட்டது.

2. தலையை அறுத்து பரிசோதனை செய்ததில் தலையின் பின்புறத்தில் 15*10 செ.மீ அளவிலும்

3.இடது பக்கவாட்டு தலையில் 8*5 செ.மீ அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது

4. தலையின் பின் பகுதியில் உள்ள மூட்டு விலகி காணப்பட்டது

5. இடது பக்கவாட்டு தலை எலும்பில் சுமால் 7 செ.மீ அளவிலான எலும்பு முறிவு காணப்பட்டது

6. மூளையைச் சுற்றி ரத்தம் கசிந்து காணப்பட்டது

7.கபாலத்தின் தள பகுதியில் நடு பகுதியில் உள்ள எலும்புகள் உடைந்து காணப்பட்டது

8. இடது பக்க மார்பு அறையில் சுமார் 300 மி.லி அளவிலான வெளிறிய திரவம் காணப்பட்டது

எனவே இறந்த நபர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட விளைவுகளால் இறந்திருக்கலாம் என்று கருத்துரை வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இறந்து போன நபருக்கு தலையில் வெளிக்காயங்கள் இல்லை என்றால் சரியல்ல நெற்றி மற்றும் வலது கன்னத்தில் காயம் இருந்தது. தலையின் மேல் பகுதியில் வெளிப்புற காயங்கள் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 19:31:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்